MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# பெரியபுராணமும் காந்தியுகமும்

முனைவர் சி.தேவி
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
9442436396 - devi-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.17079089.

**Abstract :**

Gandhiji was a lifelong thinker of peaceful means for human liberation. A part of Indian history associated with Gandhiji is called the "Gandhi Era". It focuses on Gandhiji's contribution to the freedom struggle and social reform movements. Gandhiji was called Mahatma because of his great journey of love.Gandhiji's principles of non-violence and satyagraha guided the Indian freedom struggle. Moreover, his contribution to social reforms and rural development is notable. Gandhiji's principles and activities became a powerful weapon to unite the people of India and carry forward the freedom struggle.

Key Words : Gandhiji - Periyaporanam - Gandhisim - Human Liberation

## முன்னுரை

மானுட விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் அமைதிவழி சிந்தித்தவர் காந்தியடிகள் . காந்தியடிகளோடு தொடர்புடைய இந்திய வரலாற்றின் ஒரு பகுதியே "காந்தியுகம்" என்ற சொல்லாக வழங்கப்படுகிறது. சுதந்திரப் போராட்டம் மற்றும் சமூக சீர்திருத்த இயக்கங்களில் காந்தியின் பங்களிப்பை மையமாகக் கொண்டுள்ளது . தனது மகத்தான அன்பு வழிப்பயணத்தின் காரணமாகத் தான் காந்தியடிகள் மகாத்மா என்றழைக்கப்பட்டார்.

காந்தியடிகளின் அகிம்சை , சத்தியாகிரகம் போன்ற கொள்கைகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்தின. மேலும், சமூக சீர்திருத்தங்கள், கிராமப்புற மேம்பாடு போன்றவற்றில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது . காந்தியின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மக்களை ஒருங்கிணைக்கவும் , சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுக்கவும் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக அமைந்தது.

எனவே, "காந்தியுகம்" என்பது இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான சகாப்தத்தைக் குறிக்கும் ஒரு சொல் எனலாம்.

"அன்பும் அகிம்சையும் ஆன்றோர் அரவணைப்பும்
இன்புறுகு சிந்தை எடுத்தாளும் - மன்பதையில்
சாந்தி நிலவும் சமத்துவம் ஓங்குதற்கே
காந்தியுகம் தோன்றும் கனிந்து"1( - இளவல் ஹரிஹரன், மதுரை)

என்று காந்தியுகத்தின் மலர்ச்சியை எதிர்பார்க்கும் கவிஞன் சிந்தனை இதற்கு வலுச்சேர்க்கிறது.

## பெரியபுராணம்

இலக்கியம் காலக்கண்ணாடி என்பதை பறைசாற்றும் நூல்பெரியபுராணம் ஆகும் . பக்தி இயக்கத்தின் தோற்றம், பக்தி இலக்கியத்தின் தேவை அனைத்தின் சாரம் பக்தி இலக்கியம் எனலாம் . மன்னர், மக்கள், என்ற பாகுபாடின்றி படைக்கப்பட்ட படைப்பு . சைவ அடியவர்கள் பற்றிய அருட்களஞ்சியம். சைவக் கடவுளை கையெடுக்கும் அடியவர் பற்றிய தொகுப்பு நூல்.

## பெரியபுராணம் காட்டும் காந்திய நெறி


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

காந்தியடிகள் அன்பின் வடிவாய் உருக்கொண்ட அகிம்சையை அடிநாதமாகக் கொண்டு இயங்கியவர்.

பெரியபுராணம் இறைவன் முன் அனைவரும் சமம் எனும் தத்துவத்தை எடுத்துரைக்கும் நல்ல சான்று எனும் அளவு வருணப் பாகுபாடு களைந்து பாடப்பட்ட நூல் ஆகும் . தனக்கு தீங்கு செய்தாருக்கும் நன்மை செய் என்ற அடிப்படையில் பெரியபுராணமும் காந்தீயத்தைப் பின்பற்றிய நூல் என்று உறுதிபடச்சொல்லலாம்.

**" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**2(பாடல் 270, திருமூலர், திருமந்திரம்)

என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க அன்பை போதித்த சமயம் சைவம் ஆகும் . அச்சமயத்தைப் பின்பற்றிய அடியவர்களும் அன்புவயத்தவர்களே ஆவர்.

**காரைக்கால் அம்மையார்**

அன்பின் வெளிப்பாட்டிற்கு ஒரு சிறந்த உதாரணம் காரைக்கால் அம்மையார் . அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார் . அவரது பாடல்களில் , இறைவனிடம் எந்தவித பயனும் எதிர்பாராமல், அன்பு மட்டுமே செலுத்தியது வெளிப்படுகிறது.

சைவ நெறியின் அடிப்படை யான அன்பினை தனது அற்புதத்திருவந்தாதி நூலின் முதற் பாடலிலேயே வலியுறுத்திப் பாடியுள்ளார் அம்மையார் . எம் உள்ளத்தில் என்றும் அறாது அன்பு என்கிறார். இறைவன் அம்மையாரை நோக்கி நீ என்னிடம் வேண்டுவது என்ன என்று கேட்க அம்மை

**" இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ்இருக்க என்றார்"**3

(பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் புராணம் -60) என்று பாடியதன் மூலம் காரைக்காலம்மையார்

**"எல்லாமும் இங்கே பெறுதற்கே**
**நல்லோர் வழியே நலமாகும் - சொல்லுதற்கு**
**மாந்தர் நடுவே மகத்துவம் தந்தவண்ணல்**
**காந்தியுகம் தோன்றும் கனிந்து"** 4( இளவல் ஹரிஹரன், மதுரை)

என்ற காந்தியவழியில் நின்றவர் என்பதை அறியலாம்.

**ஏனாதிநாயனார்**

சோழநாட்டிலே எயினனூரிலே பிறந்து திருநீற்றின் மகிமை அறிந்து வாழ்ந்து வந்து ஏனாதிநாயனார் வாட்படை பயிற்சி அளிக்கும் போர்த்தொழில் ஆசிரியராய் பணியாற்றினார். இவரது தொழில்சிறப்பால் தன்னிடம் கற்க யாரும் வரவில்லை என்ற பொறாமையினால் அவரை அழிக்க எண்ணினான் அதிசூரன் . போரில் இருவருக்கும் சுற்றத்தார், மாணவர்கள் உதவினர். வஞ்சனையால் கொல்ல நினைத்த அதிசூரன் , தனித்து இருவரும் போரிட வேண்டும் என்று


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

வேண்டினான். திருநீறு தாங்கிய நெற்றியினரை ஏனாதிநாயனார் எப்போதும் துன்புறுத்தார் என்பதை அறிந்தான். திருநீறு
பூசிக்கொண்டு அவர் தாக்க ஆரம்பிக்கும் நேரத்தில், முகத்தை மறைத்து வைத்திருந்த கேடயத்தினை நீக்கினான். வெண்ணீறு அணிந்த முகம் பார்த்த ஏனாதிநாயனார் அதிசூரனைத் தாக்கவில்லை. மாறாக பகைவனுக்கு ஆயுதமில்லாதவனைத் தாக்கி அழித்தான் என்ற அவப்பெயரை அதிசூரன்
பெற்றவிடக்கூடாது என்பதற்காக கையில் பாவனைக்காக ஆயுதம் தாங்கி எதிர்நின்றார்.

“எல்லோரும் எல்லாமும் இங்கே பெறுதற்கே
நல்லோர் வழியே நலமாகும் - சொல்லுதற்கு
மாந்தர் நடுவே மகத்துவம் தந்தவண்ணல்
காந்தியுகம் தோன்றும் கனிந்து. ” 5( இளவல் ஹரிஹரன், மதுரை) என்ற சிந்தனை

மனதில் தோன்றியது.

**”கைவாளுடன்பலகைநீக்கக்கருதியது**
**செய்யார்நிராயுதரைக்கொன்றாரெனுந்தீமை**
**எய்தாமைவேண்டும்இவர்க்கென்றிரும்பலகை**
**நெய்வாளுடனடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார்.”** 6

**(ஏனாதி நாயனார் புராணம்**, 40)

என்று பகைவனிடம் தான் தோற்றுப்போவதாக காட்டிக் கொண்டு உயிர் துறந்தார். இதைவிட அன்புநெறிக்குச் சான்று வேறு தேவையில்லை.

**மெய்ப்பொருள் நாயனார்**

மெய்ப்பொருள் நாயனார் **திருக்கோவலூரில்** வாழ்ந்த மன்னர் ஆவார். அடியார்கள் திருநீறு பூசி, சிவச்சின்னமாகிய உருத்திராட்ச மாலையை அணிந்து காட்சி தரும் திருவேடத்தையே மெய்ப்பொருள் (உண்மைக் காட்சி / உண்மைப் பொருள்) எனக் கொண்டவர். இதனால் **மெய்ப்பொருள் நாயனார்** என்று அழைக்கப்பட்டார். இவர் மலையமான் குலத்தில் தோன்றியவர். பகைவர்களை வென்று நாட்டுக்கு நன்மை செய்பவர். தமது செல்வம் எல்லாம் சிவனடியார் செல்வமே என்று கருதுபவர். சிவன் ஆலயங்களில் பூசை, விழா முதலியவற்றை இடைவிடாமல் செய்து இறைவழிபாட்டில் ஈடுபட்டவர்.

இவரை போர்க்களத்தில் எதிர்நின்று வெற்றி பெற இயலாத முத்தநாதன் வஞ்சனையால் வீழ்த்த எண்ணினான். சிவ அடியவர் வேடமிட்டு வந்து புத்தகக்கட்டிற்கு வாளினை மறைத்துக்கொணர்ந்து, தனித்துப் போதிக்க வேண்டுமென்று சூழலை உருவாக்கினான். தக்க தருணம் பார்த்து புத்தகக்கவளியில் இருந்த வாளால் வீழ்த்தினான். மெய்க்காப்பாளன் தத்தன் தாக்க சென்றபோது,

**”நிறைத்த செங்குருதிசோர வீழ்கின்றார் நீண்ட கையால்**
**தறைப்படும் அளவில் தத்தா நமர்எனத் தடுத்து வீழ்ந்தார்** 7

**(மெய்ப்பொருள் நாயனார் புராணம்** 16)

என்று உரைத்து தடுத்து நிறுத்தினார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**"பகைவர்க்கும் அருள்வாய் நன்னெஞ்சே" 8 ( பாரதியார், பாடல் 6)** எனும் கூற்றிற்கேற்ப , தன்னை அழிக்கும் செயல் செய்தவனையும் காக்கும் கருணையுள்ளம் படைத்தவராக மெய்ப்பபொருள் நாயனார் அன்பு நெறியில் நின்றார்.

இன்னுயிரும் சிறுக்கக் கண்டும் என்பிரான் அன்பால் என்றே நன்னெறிகாத்த சேதிநாயனார் , தொடக்கத்தில் வன்முறையைக் கைக்கொண்டாலும் புகழ்ச்சோழரைப்பார்த்த பிறகு அன்பு வழிப்பட்ட காரணத்தால் எறிபத்தரும் காந்தியுகத்தவர்களே என்று கூறலாம்.

**முடிவுரை**

மேலைநா டெங்கும் வியந்தவொரு தத்துவம்
காலைக் கதிரெனவே காரிருளை - மூலைதுரத்தி
சாந்தி நிலவிடத் தந்தசுடர் நம்நாட்டில்
காந்தியுகம் தோன்றும் கனிந்து. 9( இளவல் ஹரிஹரன், மதுரை.)

உள்ளம் நல்லதானால் மண்ணும் பொண்ணாகும் என்பது பொன்மொழி . விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் மனநிறைவும் சந்தோஷமும் ஈடு இணையற்றது. வாழ்க்கையில் இவற்றைக் கடைப்பிடிப்பதே அன்பு நெறியின் அடிப்படையாகும்.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய உயர்வு '10 (குறள் 595) என்ற அன்பு நெறியைக் கடைப்பிடிப்பதன் மூலம் இதை நமது வாழ்வில் நிதர்சனமாகக் காணலாம்.

**துணைநின்ற நூல்கள்**

1.https://kavitaikal-kataikkalam.quora.com
2. பாடல் 270, திருமூலர், திருமந்திரம்
3. பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் புராணம் -60
4. இளவல் ஹரிஹரன், மதுரை
5. இளவல் ஹரிஹரன், மதுரை
6. ஏனாதி நாயனார் புராணம், 40
7. மெய்ப்பொருள் நாயனார் புராணம் 16
8. பாரதியார், பாடல் 6
9. இளவல் ஹரிஹரன், மதுரை
10. குறள் 595



http://Creativecommons.org//license/by/4.0/.